# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2403/27 - 2024 සැප්තැම්බර් මස 25 වැනි බදාදා - 2024.09.25

*2403/27 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

***2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம்***

*2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 106(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105(1) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.*

முனைவர் **பி. நந்தலால் வீரசிங்க,**
ஆளும் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2024, செத்தெம்பர் 25.

**இலங்கை மத்திய வங்கியின் புதிய ஓய்வூதியத் திட்டத்தின் விதிகள்**

1. *1998.01.01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படுகின்ற ஆளொருவரின் ஓய்வூதிய நன்மைகள் தொடர்பில், 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் 10(ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட பின்வரும் விதி 2024.09.11 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் இல்லாதொழிக்கப்படுகின்றது.*

ஆளுநரின் ஓய்வூதியம்

*"இப்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள விளைவாந்தன்மைக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், 1998.01.01 ஆந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படும் ஆளொருவர் அவர் இவ்விதிகளின் நோக்கங்களுக்காக ஊழியரொருவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் ; அவரின் பணி ஆண்டுகளின் எண்ணிக்கையினைப் பொருட்படுத்தாது 2015.01.01 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நாணய விதிச் சட்டத்தின்*

*12 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய அவருக்கு இறுதியாகச் செலுத்தப்பட்ட அடிப்படைச் சம்பளத்தின் 74 சதவீதத்திற்குச் சமமான தொகையினை மாதாந்த ஓய்வூதியமாகப் பெறுவதற்கு உரித்துடையவராக இருத்தல் வேண்டும். எனினும், 2015.01.01 ஆந் திகதிக்கு முன்னர் ஆளுநராக நியமிக்கப்பட்ட ஆளொருவர் 2015.01.01 ஆந் திகதிக்கு பின்னர் மாத்திரம் ஓய்வூதியத்தினைப் பெறத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.*

*ஆயின், சட்ட நீதிமன்றமொன்றின் முன் முன்னாள் ஆளுநரொருவர் தொடர்பில் குற்றவியல் விசாரணைகள் அல்லது வழக்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற சந்தர்ப்பமொன்றில், அத்தகைய முன்னாள் ஆளுநரின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அத்தகைய விசாரணைகள் அல்லது நடவடிக்கை முறைகள் முடிவடையும் வரை நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும் அல்லது இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.*

*சொல்லப்பட்ட குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் விளைவாக முன்னாள் ஆளுநர் குற்றவியல் தவறொன்றிற்காக குற்றவாளியாக குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய முன்னாள் ஆளுநர் ஓய்வூதியக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரித்துடையவரல்லாதிருத்தல் வேண்டும்."*

2. அதற்கமைய, ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கின்ற ஆளொருவருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 2024.09.11 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நிறுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட நடைமுறைக்கு வரும் திகதிக்குப் பின்னர் ஓய்வூதியக் கொடுப்பனவிற்கான எந்தவொரு கோரிக்கையும் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது.

EOG 09-0173

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.